பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

தேயிலை ஆராய்ச்சி சபை

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

# வெற்றிடங்கள்

1. கனிஷ்ட உதவி எழுதுவினைஞர் பதவி, புனித ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி
2. கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி பதவி, புனித ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி
3. கள அதிகாரி பதவி, புனித ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி
4. ஓட்டுநர் பதவி, புனித ஜோக்கிம் தோட்டம், இரத்தினபுரி

புனித ஜோகிம் தோட்டத்தில் மேலுள்ள பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. கனிஷ்ட உதவி எழுதுவினைஞர் பதவி

**வேலை விபரம்**

பிரிவு வேலை தொடர்பான விடயங்கள் உட்பட, பிரிவு பெயரிடாப்புகள், புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கையாளுதல் மற்றும் கணக்கிடுதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாவார்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சை (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

பெயரிடாப்பு எழுதுவினைஞர் ஒருவராக பயிற்சி பெற்றவர்

**சம்பளம்:** தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசித்தீர்மானிக்கப்படும்

**வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

## 2. கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி பதவி

**வேலை விபரம்**

தொழிற்சாலை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தேயிலை உற்பத்தி மற்றும் தொடர்புடைய பணிகளில் தொழிற்சாலை அதிகாரிக்கு உதவுவதற்குப் பொறுப்பாவார்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சை (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

பயிற்சி பெற்ற தொழிற்சாலை கண்காணிப்பாளர் ஒருவர்

**சம்பளம் :** தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசித்தீர்மானிக்கப்படும்

**வயதெல்லை :** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

## 3. கள அதிகாரி பதவி

**வேலை விபரம்**

அறுவடை செய்தல், விவசாய நடைமுறைகளை மேற்கொள்வது மற்றும் அனைத்து பிரிவு புத்தகங்களையும் பராமரித்தல் மற்றும் தோட்ட அதிகாரியின் அறிவுறுத்தலின் கீழ் தொழிலாளர் பிரச்சினைகளைக் கையாளுதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாவார்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சை (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

உதவி கள அதிகாரி ஒருவராக குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்

**சம்பளம் :** தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசித்தீர்மானிக்கப்படும்

**வயதெல்லை :** 32 வயதுக்கு குறையாத மற்றும் 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

## 4. ஓட்டுநர் பதவி

**வேலை விபரம்**

தோட்ட அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் பச்சை இலைகள் / பல்வேறு பொருட்கள் மற்றும் நோயாளிகளை கொண்டு செல்வதற்கு பொறுப்பாவார்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

தரம் 08 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

**மற்றும்**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை (கனரக வாகனங்களை செலுத்துவதற்கு) பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற பின் அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் அனுபவம் அவசியமாகும்.

**சம்பளம் :** தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசித்தீர்மானிக்கப்படும்

**வயதெல்லை :** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பணியின் தேவைக்கு அமைய இரத்தினபுரி புனித ஜோக்கிம் தோட்டம் அல்லது இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் வேறு தோட்டங்களில் பணியாற்றுவதற்கு வேண்டி ஏற்படும்.

பிறப்புச் சான்றிதழ், தொடர்புடைய கல்வி மற்றும் ஏனைய தொழில் தகைமைகளின் பிரதிகள், சேவை சான்றிதழ்கள் மற்றும் தொடர்புடைய துறையில் விண்ணப்பதாரரின் திறன்கள் மற்றும் அறிவை மதிப்பிட முடியுமான உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து முழுமையான சுயவிபரக் கோவையை விண்ணப்பதாரர் வழங்குதல் வேண்டும். அதேபோன்று விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2025 டிசம்பர் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கீழ் உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளில் பணியாற்றும் அதிகாரிகள் அனுப்புகின்ற விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். இந்தத் தேவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிப்பதற்கு காரணமாகும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**புனித கூம்ஸ், தலவாக்கலை**

tamilguru.lk